இணைப்பு

[325-ம் பக்கத்தில் 416-ஆம் எண்ணுள்ள வெள்ளிக்குறியிட்ட வினாவிற்குரிய விடையைக் காண்க.]

(அ) சென்னை மாநகரில் பால் விற்பனை குறித்த ஆய்வு ஒன்றை மேற்கொள்ளுமாறு இந்திய விற்பனை ஆராய்ச்சிக் கழகம் தமிழ்நாடு பால்பண்ணை வளர்ச்சிக் கழகத்தினால் கேட்டுக் கொள்ளப்பட்டது. இக்கழகம் ஓர் அறிக்கையைத் தமிழ்நாடு பால்பண்ணை வளர்ச்சிக் கழகத்திடம் 1972 டிசம்பரில் அனுப்பியது.

(இ) அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள முக்கியமான கருத்துக்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

(1) சென்னை மாநகரில் உள்ளவர்கள் பயன்படுத்தும் (திரவப்) பாலின் மொத்த அளவு நாளொன்றுக்கு 4.13 லட்சம் லிட்டர் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது.

(2) 1975-76-ல் சென்னை மாநகர மக்களின் மொத்தப் பால் தேவை நாளொன்றுக்கு 5.20 லட்சம் லிட்டர் முதல் 5.50 லட்சம் லட்சம் லிட்டர் வரை இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

(3) மாநகரில் விற்பனையாகும் மொத்தப் பால் அளவில் பால் பண்ணை விற்பனை செய்யும் பாலின் அளவு தற்போது 17 சதவீதமாகும். தமிழ்நாடு பால்பண்ணை வளர்ச்சிக் கழகம் தனது உற்பத்தியைப் பெருக்குவதற்கான தற்போதைய திட்டத்தைச் செயல்படுத்தினால் 1975-76 வாக்கில் பால்பண்ணை விற்பனை செய்யும் பாலின் அளவு மொத்த விற்பனையில் 57 சதவீதம் ஆகும்.

(4) கூடுதலாக உற்பத்தி செய்யும் பாலை விற்பனைக்குக் கொண்டு வருவதில் பால்பண்ணைக்குப் போட்டியாக இருப்பது தனியார் பால்பண்ணை விற்பனை நிலையங்கள், வீடுகளுக்குக் கொண்டு வந்து விற்கும் பால்காரர்கள் ஆகியவர்களே.

(5) பால்பண்ணை தனது விற்பனையை விரிவுபடுத்த வேண்டுமெனில் அது புதிதாகப் பால் வாங்குபவர்களுக்குப் பால் விற்பனை செய்வதன் மூலமே அவ்வாறு தனது விற்பனையை விரிவு படுத்த முடியும்.

(6) பால்பண்ணையிடமிருந்து பால் வாங்காதவர்கள் தாங்கள் மற்றவர்களிடமிருந்து வாங்கும் பாலின் விலை அதிகம் என்று தெரிவித்தனர்.

(7) பால்பண்ணையிடமிருந்து பால் வாங்காதவர்களில் 60 சதவீதத்திற்கும் மேற்பட்ட குடும்பத்தினர் அவர்கள் விரும்பும் நேரத்தில் விரும்பும் இடத்தில் கொண்டு வந்து வழங்கப்பட்டால் பால்பண்ணையின் பாலை வாங்கிக் கொள்ளத் தயாராகவுள்ளனர்.

(*a*) The Market Research Corporation of India were engaged to undertake a study of the milk market in Madras City by the Tamil Nadu Dairy Development Corporation. The Corporation has furnished a report to the Tamil Nadu Dairy Development Corporation in December 1972.

(*b*) The main points brought out in the report are given below :

1. The aggregate consumption of liquid milk in Madras City is estimated at 4.13 lakh litres per day.

2. The total demand for milk in 1975–76 is likely to be 5.20 to 5.50 lakh litres per day.

3. The Madhavaram dairy's share of the total liquid market is currently 17 per cent. If the present programmes of the Tamil Nadu Dairy Development Corporation is implemented the dairy's share will be 57 per cent by 1975–76.

4. The major competition that the dairy faces in the marketing of additional milk is from private booths and vendors.

5. If the dairy has to expand its market and this has to be done by selling to new buyers.

6. Non-buyers of dairy milk reported that the price of milk purchased from other sources was high.

7. Over 60 per cent of households who are purchasing dairy milk are willing to purchase dairy milk if the time and place requirements are met